# இயேசுவே வாரும்

தொடர்பு முகவரி:

சகோ. காலேப் யோசுவா
# 11, திருமால் நகர்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## தேவனுடைய சரீரமாகிய சபை

1. கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரரே நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கு சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இங்கு நான், உங்களுக்குத் தேவன் சென்னையிலுள்ள ஏல்பெத்தேல் சபையை அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூடாரத்தையல்ல, கல்வாரி சபையை அல்ல, மணவாட்டி கூடாரத்தையல்ல மாறாக தேவன் தம்முடைய சரீரமாகிய சபையை எவ்வாறு கட்டுகிறார் என்பது குறித்து எழுத விரும்புகிறேன். இது சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியும், தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்டினதற்கு மாதிரியாயிருக்கிறது. இந்தச் செய்தித் தொகுப்பிற்காக நீங்கள் 2சாமு.7:1-17 வசனங்கள் அல்லது 1நாளா.17:1-15 வசனங்களைத் தியானிக்கலாம்.

3. தாவீது ஈசாய்யின் எட்டு குமாரர்களில் எல்லாருக்கும் இளையவன். யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரான் 1சாமு.17:11. கறவலாடுகளின் பின்னாகத்திரிந்தவன். 1சாமு.17:15. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவன். 1நாளா.28:10. தீர்க்கதரிசியாகிய சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்டவன். 1சாமு.16:10-13. இவன் தன்னைக் குறித்து: கர்த்தர் என் தகப்பனுடைய வீட்டார் எல்லாரிலும் என்னைத் தெரிந்துகொண்டார் என்கிறான். 1நாளா.28:4. அதோடு மட்டுமல்ல கர்த்தர் என் தகப்பனுடைய குமாரருக்குள் என் மேல் பிரியம் வைத்தார் என்கிறான். 1நாளா.28:4. இவன் சந்ததியில் தான் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்து தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டார். மத்.1:1, 9:27, 21:9. இங்கு பிரியமானவர்களே நாமும் நம்மை குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போமா? நாம் நம்முடைய வீட்டார் எல்லாரிலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமா? நம்முடன் பிறந்த சகோதரர்களில் நாம் தேவனுக்குப் பிரியமான பாத்திரமா?

4. தாவீது எருசலேமில் கேதுரு மரவீட்டில் (House of cedars) வாசம் பண்ணி வந்தான். கேதுரு மரம் நீண்டகாலம் உழைக்கக்கூடிய, உறுதியான, நல்ல வாசனையுள்ள மரமாகும். நாம் தேக்கு மரம் (Teak wood) என்று அழைக்கும் மரத்தைப்போன்று உறுதியானது. ஆனாலும் இதைவிட, அது இன்னும் உறுதியானதும் நறுமணமுள்ளதாயும் இருக்கிறது. Cedar is a durable and fragrant wood. ஆனால் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி கிபியோனில் (1நாளா.16:39) திரையின்கீழ் இருந்தது. இந்த திரை தோலினால் செய்யப்பட்ட தொங்கும் திரைச்சீலை/மறைவு ஆகும். The ark of covenant of the Lord remaineth under curtains.

5. ஆதலால் கர்த்தரின் நாமத்துக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது தன் இருதயத்தில் நினைத்தான். 1நாள்.22:7. அதாவது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும், பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட தன் மனதிலே நினைத்தான். 1நாளா.28:2. இதோ, என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக சுகந்தவர்கங்களின் தூபம் காட்டுகிறதற்கும், சமூகத்தப்பங்களை எப்பொழுதும் வைக்கிறதற்கும் காலையிலும் மாலையிலும், ஓய்வு நாட்களிலும், மாத பிறப்புகளிலும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் பண்டிகைகளிலும், இஸ்ரவேல் நித்தியகாலமாய் செலுத்த வேண்டிய சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறதற்கும் அவருடைய நாமத்துக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அதை அவருக்கு பிரதிஷ்டை பண்ணும்படி எத்தனித்தேன் என்கிறான். 2நாளா.2:4. கர்த்தரின் நாமத்துக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நினைத்ததோடு மட்டுமல்ல அதை கட்டவும் ஆயத்தம் பண்ணினான். 1நாளா.28:2.

6. தாவீதின் மனதில் நேர்மையிருந்தது, உத்தமம் இருந்தது, சுயநலமின்மையிருந்தது. நாம் நம்முடைய வசதிக்கு மேல் வசதிகளை பெருக்கிக்கொண்டேயிருக்க நினைப்போம். எவ்வளவு தான் கர்த்தர் நம்மை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருந்தாலும் தேவனுடைய இருதயத்துக்கடுத்தவைகளை நாம் தேடாது, மேலும் மேலும் நம்முடைய பொருளாதார நிலையை விருத்திசெய்யவே நாடுகிறோம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்ற திருவசனத்தை எத்தனையோ முறை நாம் வாசித்திருக்கிறோம். ஆனால் நாம் முதலாவது நமக்கடுத்தவைகளுக்கே முதலிடம் கொடுத்து அவைகளைக் குறித்து சிந்திப்போம், செயல்படுவோம். தேவனுக்கடுத்தக் காரியங்கள் நம்முடைய கடைசி செயலாயிருக்கும். ஆக நாம் யாவரும் சுயநலமுள்ளவர்கள். ஒருவன் தனக்கானவைகளைத் தேடும்வரை அவன் கிறிஸ்துவின் சரீரத்திலில்லை. மாறாக இரண்டாவது பத்தியில் கூறிய சபைகளிலே அவயவமாகயிருக்க முடியும். மனுஷர்கள் தற்பிரியராயிருக்கிறார்கள். 2தீமோ.3:2. கிறிஸ்து இயேசுவுக்குள்ளானவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள். பிலி.2:21. அவனவன் தனக்கானவைகளையே தேடுகிறானேயன்றி பிறனுக்கானவைகளை தேடுகிறதில்லை. பிலி.2:4, 1கொரி.10:24. மேலும் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும். 1கொரி.12:25-27. ஒருவன் கிறிஸ்துவின் சரீரத்தில் இருப்பானானால் முதலாவது தேவனுடைய ராஜியத்துக்கடுத்தவைகளையும், பிறனுக்கடுத்தவைகளையுமே தேடுவான்.

7. சமீப நாட்களில் நான் திருவைகுண்டத்திலிருந்து சென்னை குடியேறியதால் அதற்காக அதிக செலவுகளை சந்திக்க வேண்டியவனாயிருந்தேன். இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று

கூறும் சில பணவசதியுள்ள, எனக்கு நன்கு அறிமுகமான சகோதரர்களை சந்தித்தேன். ஒரு சகோதரர் நான் என்னுடைய வருமான வரி கட்டவே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன், ஆதலால் உங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன் என்றார். அடுத்த நபர் சகோதரனே நான் 8/9 லட்சத்தில் வீடு வாங்கியுள்ளேன். அதில் கொஞ்சம் கடனுண்டு. அதை கட்டுவதற்காக பிரயாசப் பட்டுக்கொண்டிருக்கிறேன். அதை கட்டி முடித்தவுடன் உங்களுக்கு உதவுகிறேன் என்றார். மூன்றாவது நபர் சகோதரனே ரூ.15 லட்சத்துக்கு மேல் வங்கிக் கடன் வாங்கி பல வீடுகளைக் கொண்ட ஒரு பெரிய கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கிறேன். முதலாவது அதை கட்டி, வீடுகளை வாடகைக்குக் கொடுக்க வேண்டும். அதுவே என்னை முற்றிலுமாக ஆட்கொண்டிருக்கிறது. ஆதலால் இந்நிலையில் உதவிகள் எதுவும் செய்யமுடியாத நிலையிலிருக்கிறேன் என்றார். இவ்வாறாக, பொதுவாக இக்காலத்துக்குரிய செய்தி, சகோதர சிநேகம், கிறிஸ்துவின் சிந்தை, பரிசுத்தஆவியின் அபிஷேகம், எடுத்துக்கொள்ளப் படுதல், மணவாட்டி எனக் கூறுகிறவர்கள் மத்தியில் சுயநலம் தான் எங்கும் காணப்படுகிறதேயன்றி, பிறனுக்கானவைகளைக் குறித்து, சரீரத்திலுள்ள அடுத்த அவயவத்தைக் குறித்த கவலை யாருக்கும் இருப்பதில்லை. இக்காலத்துக்குரிய செய்தியில் பெரும்பாலும் கள்ள கபடமுள்ள வேலையாட்களும், அவிசுவாசிகளும், பாவணைவிசுவாசிகளுமே நம்மத்தியில் அதிகமதிகமாக இருக்கிறார்கள். விசுவாசிகள் ஆங்காங்கு மிக்க ஏழ்மையான நிலையில், தங்களுடைய ஐக்கியத்தை பிதாவோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பது அரிது. ஆனால் போலிக்கூட்டத்தை உடனே கண்டுகொள்ளலாம்.

8. இங்கு தாவீது ஆலயத்தைக் கட்ட நினைத்தான். உடனே சகல ஆயத்தமும் செய்ய ஆரம்பித்தான். நாம் தசமபாகம் கொடுக்க நினைக்கிறோம். ஆனால் கொடுப்பதில்லை. நாம் ஊழியங்களை தாங்க நினைக்கிறோம். ஆனால் தாங்குவதில்லை. நாம் ஊழியக்காரனை ஆதரிக்க நினைக்கிறோம், ஆனால் ஆதரிப்பதில்லை. நாம் அநேக நற்காரியங்களை செய்ய முடிவு எடுக்கிறோம், ஆனால் செயல்படுத்த முடிவதில்லை. பிறருக்கு உதவிகள் செய்ய நினைக்கிறோம், ஆனால் முடியவில்லை. டி.வி. பார்க்கக் கூடாது என நினைக்கிறோம், ஆனால் டி.வி. பார்க்காமலிருக்க முடியவில்லை. **பொதுவாக நம்முடைய எண்ணங்கள் நல்லதாயிருக்கும், ஆனால் நமது கிரியைகள் நமது எண்ணத்திற்கு மாறாகயிருக்கும். ஏனென்றால் தேவன் உன்னை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைய தகுதிப்படுத்தவில்லை.** கொலோ.1:12. தாவீது ஆலயத்தைக் குறித்து தன் மனதில் எண்ணங்கள் உண்டானவுடன் செயல்பட ஆரம்பித்தான். அவனுடைய எண்ணமும் செயலும் ஒன்றுக்கொன்று இணைந்து இருந்தது. He was an action minded person. உங்கள் விசுவாசமும், கிரியையும் இணைந்திருக்க வேண்டும். ஒன்றிருந்து மற்றொன்று இல்லாவிட்டால் பிரயோஜனமில்லை. கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்படுகிறது. இக்காலத்துக்குரிய செய்தியிலிருக்கிறோம் என்பவர்களுடைய விசுவாசம் செத்ததாகவே இருக்கிறது. ஆனாலும் நாங்கள் மணவாட்டியல்லவா என பெருமை பேசிக்கொள்கிறார்கள். அவ்வளவுதான், பேச்சோடு அவர்கள் காரியம் முடிந்தது.

9. இங்கு தாவீது நான் இவ்வளவு பெரிய அரண்மனையில் சொகுசாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன். ஆனால் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி ஒரு கூடாரத்திலிருந்து மறுகூடாரம் சென்று கொண்டிருக்கிறது என்று நினைத்து தன் இருதயத்தில் குத்தப்பட்டான். தேவன் வாசம் செய்ய ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும். நான் மட்டும் வசதியாகயிருந்துவிட்டால் போதாது. இதர ஊழியர்களைத் தாங்க வேண்டும், ஊழியங்களைத் தாங்க வேண்டும் என நினைத்தான். ஆலயம் கட்டவேண்டும் என்ற நல்லெண்ணங்கள் கொண்டவனாயிருந்து, செயல்படவும் துவங்கினான். திட்டம் தீட்டியதோடல்ல அதை செயல்படுத்தவும் ஆயத்தம் பண்ணினான். இன்று நாம் திட்டங்கள் தீட்டுவதிலேயிருக்கிறோம், ஒரு சகோதரனை அறிவேன், நான் அவரை சந்திக்கும் வேளையில் சகோதரனே உங்கள் செய்தித் தொகுப்புகள் எனக்கு மிக்க பிரயோஜனமாகயிருக்கின்றது. தேவசமூகத்தில் பலமணி நேரங்கள் தரித்திருந்து, மிக்க பிரயாசப்பட்டு எழுதுகிறீர்கள், உங்களுக்கு உதவிகள் செய்ய வேண்டுமென் பலமுறை எண்ணுகிறேன். ஆனால் என்னால் முடியவில்லை. ஏனென்றால் என் குடும்பச் செலவு ரூ.8,000/-க்கு மேல், எனது வருமானத்திற்கு மேல் ஆகிறது. இதனால் உங்களுக்கு உதவ முடியவில்லை என்பார். அதாவது குடும்பச் செலவிற்கு எப்படியாவது, எங்கேயாவது கடன் வாங்கி சமாளித்துக்கொள்ளுகிறார். தேவனுடைய காரியம் வரும்பொழுது அதை அசட்டை செய்ய வேண்டும் என்பதே அவருடைய எண்ணமாயிருப்பதால் ஊழியக்காரனைத் தாங்கமுடியவில்லை.

10. அடுத்து தாவீது தன் இருதயத்தின் எண்ணத்தை நாத்தான் தீர்க்கதரிசியிடம் சென்று கூறினான். 1நாளா.17:1. ஏன் தன் எண்ணத்தை ஒரு தீர்க்கதரிசியிடம் சென்று கூறினான்? தேவனுடைய சித்தத்தை அறிய, தேவனுடைய வார்த்தையை அறிய. ஏனென்றால் தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிக்கே வருகிறது. ஆமோஸ்.3:7, எண்.12:6, 2நாளா.36:12. நாம் ஒரு காரியத்தைத் தொடங்கும்முன் அது தேவனுடைய சித்தமாயென்று அறியவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவனுடைய சித்தத்தை அறிந்து நாம் செயல்பட்டால் அதில் தடுமாற்றம் எதுவுமிருக்காது. ஏமாற்றம் எதுவுமிருக்காது. தோல்வி எதுவும் இருக்காது. தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிக்கே வருகிறது. இக்காலத்துக்குரிய செய்தியில் அநேக பாஸ்டர்கள், சுவிசேஷகர்கள், போதகர்கள் தேவனுடைய வார்த்தை தங்களுக்கு உண்டாயிற்று என்று கூறுகிறார்கள். இது பக்கா பொய்யாகும். நீங்கள் உங்களுக்கடுத்த தேவனுடைய சித்தத்தை தேவனுடைய வார்த்தையினாலும், இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

11. பொதுவாக தீர்க்கதரிசிகளுக்கு தேவனுடைய வார்த்தை தரிசனத்தின் வாயிலாக உண்டாகிறது. தரிசனம் என்பது என்ன? ஒருவனுடைய ஐம்புலன்களும் தங்கள் தங்கள் பணிகளை செய்து கொண்டிருக்கையில் ஒருவன் காணும் காட்சி தரிசனமாகும். அவன் தன் கண் முன்னால் காணும் ஒரு காட்சியாக அது இருக்கும். நம் மத்தியில் அநேகர் யூகத்தின் வாயிலாக தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். அது தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பானது.

12. இப்பொழுது தீர்க்கதரிசியாகிய நாத்தான், தாவீது ராஜாவிடம் நீர் உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும், தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான். 1நாளா.13:2. Do all that is in your heart, for God is with you. ஆனால் அது தேவனுடைய வார்த்தையல்ல, அது தேவனுடைய சித்தமுமல்ல. இங்கு தீர்க்கதரிசி தேவனுடைய சித்தத்தைப் பிரதிபலிக்கவில்லை. ஏனென்றால் அன்று இரவே கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசியாகிய நாத்தானுக்கு உண்டாயிற்று. 1நாளா.13:7. தாவீதின் மனதிலே இருந்த விருப்பம் நல்லது தான். 2நாளா.6:8. ஆனாலும் அவன் தேவனுடைய ஆலயத்தை

கட்டமாட்டான். 1நாளா.17:4, 2நாளா.6:9. தாவீதின் கர்ப்பப்பிறப்பாகிய அவன் குமாரனே கட்டுவான் என்றார். 1நாளா.17:11,12, 2நாளா.6:9.

13. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவதென்ன? தேவனுடைய ராஜ்யத்துக்கென்று செய்யவேண்டிய நல்ல காரியங்கள் நம் மனதில் இருக்கலாம். ஆனால் அது தேவனுடைய சித்தமா என்று முதலில் கண்டறிய வேண்டும். நான் என்னுடைய வாழ்க்கையில் கர்த்தர் கொடுத்த ஊழியத்தைத் திறம்படச் செய்ய தேவையான பணத்திற்காக லாரி ஒன்று வாங்கிவிட்டு அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஊழியம் செய்ய நினைத்தேன். ஆனால் தேவன் அதில் பிரியமாயில்லை. பின் மசாலா பொடிகள் தயாரித்து அதன்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஊழியம் செய்ய நினைத்தேன், அதிலும் தேவன் பிரியமாயில்லை. பின் கூலிக்காக மசாலா அரைத்துக் கொடுத்து, அதன்மூலமாக முற்றிலும் எனது கைகளின் பலன்களைக் கொண்டு கர்த்தருக்காக ஊழியம் செய்ய நினைத்தேன். கர்த்தர் அதில் பிரியமாயிருந்ததைக் கண்டேன். அதாவது ஊழியக்காரனுடைய பெரிய திட்டங்களில் தேவன் இல்லாததையும், மிகச் சிறிய கைகளின் பிரயாசங்களில் தேவன் இருப்பதையும் கண்டேன். உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். ஆதி.3:19. பிறனுடைய முகத்தின் வேர்வையால் அல்ல.

14. ஒருவன் ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தை செய்துகொண்டிருக்கலாம். முதலில் அது தேவனுடைய சித்தமாயென்று கண்டறிய வேண்டும். அவ்வாறு அறியாவிட்டால் அவன் தேவ சித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு பணி செய்கிறவனாயிருப்பான். ஒருவன் தன் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். 2பேது.1:10. அப்படிச் செய்தால் அவன் அதில் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. நாம் செய்யப்போகும் அனைத்தும் தேவனுடைய வார்த்தையோடு பொருந்தவேண்டும். நீ பாஸ்டரானால் உன் ஊழியம் தேவனுடைய வார்த்தையோடு பொருந்தவேண்டும். நீ மூப்பன் என்றால், நீ டீக்கன் என்றால் உங்கள் பணிகள் யாவும் தேவனுடைய வார்த்தையோடு பொருந்த வேண்டும். மற்றபடி நீ தேவசித்தத்துக்குப் புறம்பாயிருப்பாய்.

15. நீ தேவனுக்கென்று, இக்காலத்துக்குரிய செய்திக்கென்று ஒரு ஊழியம் செய்ய நினைக்கிறாய். நல்லது தான். ஆனால் இன்னும் உன் சரீரத்தின் ஒரு பாகமாகிய உன் மனைவி இரட்சிப்புக்குள் இல்லை. அவள் விக்கிரக ஆராதணைக்காரியாயிருக்கிறாள். இப்படியிருக்க தேவன் உன்னை எப்படி ஊழியத்துக்கென்று அழைத்திருக்கமுடியும்? நீ ஊழியத்துக்கு அழைக்கப்பட்டால் நீயும், உன் சரீரத்தின் ஒரு பாகமாகிய உன் மனைவியும் ஒரே விசுவாசத்தில் இருக்க வேண்டும். அப்படியில்லாத நிலையில் நீ தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறாய். நீ உன் சுயபுத்தியினால் அவ்விதம் செய்கிறாய். ஆனால் கர்த்தர் உன்னை அந்த ஊழியத்துக்கு தகுதிப்படுத்தவில்லை. உன் பணபலமே உன்னை அந்த ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தியது. ஆதலால் தேவனுடைய சில வார்த்தைகளையும், செய்தியிலிருந்து சில வார்த்தைகளையும் எடுத்துக்கொண்டு நீ செய்யும் அடாவடித்தனத்தை விட்டுவிலகு. தேவகோபாக்கினைக்கு ஆளாகாதே என்று உன்னை எச்சரிக்க விரும்புகிறேன்.

16. இந்நாட்களில், இக்காலத்துக்குரியச் செய்தியில் அநேகர் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்கிறதைக் காண்கிறேன்.

1) திருமணம் ஆகாமல் ஊழியம் செய்யும் பாஸ்டர்.
2) திருமணம் ஆகாமல் மூப்பர் பணியை சபையில் செய்யும் வாலிபர்.
3) திருமணம் ஆகாமல் டீக்கன் பணியை சபையில் செய்யும் வாலிபர்.
4) இரட்சிக்கப்பட்டாத மனைவியை உடையவன் ஊழியம் செய்கிறான், பாஸ்டராகயிருக்கிறான், இதெல்லாம் முற்றிலும் தவறு.
5) சுவிசேஷ பாடகன் (Gospel singer) என்று தேவனால் ஏற்ப்படுத்தப்பட்ட ஊழியக்காரன் உண்டு என்பதற்கு வேதத்தில் எங்கும் ஆதாரமில்லை. இக்காலத்துக்குரிய செய்தியிலும் ஆதாரமில்லை. சுவிசேஷப் பாடல்கள் பாடுகிறேன் என்று கூறி யாரும் சுவிசேஷ ஊழியம் செய்ததாகவும் வேதத்தில் சபைக்காலங்களில் எங்கும் ஆதாரமில்லை. இது தேவனுடைய வார்த்தையில் காணப்படாத ஒரு ஊழியம். பிரசங்கிப்பதே ஊழியம். பாடல்கள் பாடுவது ஊழியமல்ல. நீ என்னோடு வாதாடவிரும்பினால், சகோதரனே தேவனுடைய வார்த்தை, தீர்க்கதரிசியின் செய்தியுடன் என்னிடத்தில் வா.
6) ஒருபுறம் நல்ல அரசாங்க உத்தியோம். மறுபுறம் கர்த்தருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டர் உத்தியோகம். இது கர்த்தர் ஏற்படுத்தாத, முற்றிலுமாக தேவசித்தத்துக்குப் புறம்பான ஊழியம்.
7) இரு மனைவிகளை உடையவன் ஊழியம் செய்கிறான். இது கொடுமையிலும் கொடுமை. முதல் மனைவியின் தகாத நடவடிக்கையைக் கண்டு, அவளை தள்ளிவிட்டு, மற்றொருத்தியைக் கூட்டிவைத்துக் கொண்டு ஊழியம் செய்கிறேன், கர்த்தர் அற்புத அடையாளங்களினால் என் ஊழியத்தை உறுதிப்படுத்துகிறார் என நீ கூறலாம். அற்புத அடையாளங்கள் உன் அழைப்புக்கு ஆதாரமில்லை. For the gifts and callings of God are without rependance. கர்த்தர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மாம்சமாகிய யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிறார். அதை நீ மறந்துவிடாதே. கண்காணியை விரும்புகிறவன் ஒரே மனைவியையுடைய புருஷனாயிருக்க வேண்டும். நீ தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக செயல்படலாம். ஆனால் தேவன் தம்முடைய வார்த்தைக்கு மாறாக செயல்படுகிறவர் அல்ல. ஒரு ஊழியக்காரன் தகுதிகள் குறித்து 1தீமோ.3:1-13, தீத்.1:5-11 வசனங்களை தியானியுங்கள்.
8) சபையில் உபதேசங்களைக் கொண்டு வர பாஸ்டர்களுக்கு தகுதியில்லை. சபை அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பரின் உபதேசத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. எபே.2:20. ஒரு பாஸ்டர், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசத்தின்படியே சபையை வழிநடத்த வேண்டும். அவனாக எந்தவிதமான உபதேசங்களையும் கொண்டுவரமுடியாது.
9) ஒருவன் தன்னைத் தானே ஐந்துவகை ஊழியங்களிலும் அழைத்துக்கொள்ளுகிறான். இதுவும் தவறாக ஊழியம். உதாரணம் மும்பை, சகோ.டேனியல் கிறிஸ்டியான். ஐந்துவகை ஊழியத்தை ஒன்றுக்கொன்று கலக்கக்கூடாது. அது தனித்தன்மை வாய்ந்தது, சுயாதீனமானது.
10) தங்கள் குடும்பத்தின் வாரிசுகளை தங்களுக்குப் பின் ஐந்துவகை ஊழியத்தில் ஏற்படுத்துதல், அதற்காக முயற்சித்தல் தவறான செயலாகும். வலசரவாக்கம், பாஸ்டர் சாமுவேல் மேலும் பாஸ்டர் ஜான் சாமுவேல் போன்றவர்களின் இந்த சரீர முயற்சி வேதத்திற்கு புறம்பானது.

தாங்கள் சேகரித்த சொத்துக்களை பாதுகாக்கவே இவர்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

17. முடிவாக ஒருவன் தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்கிறானா என்று (அப்.15:36) கவனித்து, அவன் தேவசித்தத்துக்குப் புறம்பாக ஊழியம் செய்தால் அவனுடைய ஊழியத்தில் பங்குகொள்ளக் கூடாது. நீங்கள் அவர்களுடைய ஊழியத்தில் பங்குகொள்வது மறைமுகமாக அவர்களை ஆதரிப்பதாகும். யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோசபாத்தைப் பார்த்து துன்மார்க்கனுக்கு (ஆகாப் ராஜாவுக்கு) துணை நின்றது என்ன என்று கேட்டான். 2நாளா.19:2. பல சபைகளில் உள்ள விசுவாசிகளை நான் அறிவேன். அவர்களை சந்திக்கிற வேளையில் தங்கள் பாஸ்டர் காரியங்கள் முற்றிலுமாக சரியில்லை என்பார்கள். ஆனாலும் அவரைவிட்டு வெளியே வர மாட்டார்கள். இது பாஸ்டரது அக்கிரமத்தில், அநீதியில், தவறான நடக்கையில் பங்குகொள்வதாகும். ஒரு பாஸ்டர் திருமணம் ஆகாதவனாக, இரு மனைவிகளையுடையவனாயிருக்கும் போது அவனுடைய ஊழியத்தில் நீ எவ்வாறு பங்குகொள்வாய்? பங்குகொண்டால் நீயும் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவன் செய்யும் ஊழியத்தில் பங்குகொள்கிறாய் என்பதாகும். பிரியமானவர்களே நீங்கள் உங்கள் சுயபுத்தியின் மேல் சார்ந்து ஊழியம் செய்யாதீர்கள், ஊழியங்களில் பங்குகொள்ளாதீர்கள், ஊழியங்களை தாங்காதீர்கள்.

18. இங்கு நாத்தான் தீர்க்கதரிசி தாவீதிடம் உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும்; தேவன் உம்மோடு இருக்கிறார் என்று கூறியது நடக்கவில்லை. ஏன்? நாத்தான் தன் சுயஅபிப்பிராயத்தை தெரிவித்தான். தன் சுயஎண்ணத்தைக் கூறினான். தன் சுயசிந்தையை வெளிப்படுத்தினான். It is a human judgement.

19. பொதுவாக பாஸ்டர்கள் தங்கள் சுயசிந்தையை, சுயஎண்ணத்தை, சுயஅபிப்பிராயத்தை சபைக்குள் நுழைக்கிறார்கள். இது தவறு. பாருங்கள், சுடிதார் ஆடை அணியாதே, திருமண வேளையில் மோதிரம்/ தாலி அணிவிக்காதே, கர்த்தருடைய இராப்போஜன வேளையில் கூடியமட்டும் வெண்ணிற ஆடை அணிந்து வா, சபையில் முழங்கால் போட்டு ஜெபிக்காதே, மாறாக எழுந்துநின்று ஜெபம் செய், ஜெபம் முடிவில் சங்.103ன் சில வசனங்களை கூறாதே, அது பாரம்பரியம். இப்படியாக ஆங்காங்கு பாஸ்டர்கள் தங்கள் தங்கள் சுயகருத்துக்களை, உபதேசங்களை சபைக்குள் நுழைத்து சபையை பாழாக்கி வருகிறார்கள். இவர்கள் உபதேசங்களைக் கொண்டுவர தகுதியற்றவர்கள். இவர்கள் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களைக் கடைபிடித்து, சபையை அதன்படி வழிநடத்த வேண்டியவர்கள். பிரியமானவர்களே, பொதுவாக நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் உங்களை குற்றவாளியாக்காது காத்துக்கொள்ளுங்கள். ரோ.14:22. திருமண வேளையில் தாலி அணிவிக்காதே, மோதிரம் அணிவிக்காதே, பைபிள் மாற்றிக்கொள் என்று உபதேசிக்க இவர்களுக்கு அதிகாரம் எங்கிருந்து வந்தது? வெளி.19,22 அதிகாரங்களில் யோவான் வணங்கிய தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் தான் என்ற வெளிப்பாட்டை நீ யாரிடமிருந்து பெற்றாய்? நீ கூறும் ஐந்தாம் முத்திரை பத்திகள் 203-210 வரை நானும் ஒரு முறையல்ல பலமுறை தியானித்தேன். சகோ.பிரன்காம், அந்த தூதன் தான் என்று எங்கும் மறைமுகமாகவோ நேரிடையாகவோ கூறவில்லை. உனக்கு தைரியமிருந்தால் என்னுடன் வந்து உட்கார்ந்து தியானிக்க உன்னை சகோதரன் என்ற முறையில் அழைக்கிறேன். நான் இந்நாட்களில் சென்னையில் இருப்பது நீங்கள் அறிந்த காரியமே.

20. ஒரு தீர்க்கதரிசி தரிசனம் காணவேண்டும். அதுதான் தீர்க்கதரிசனம். அதாவது தீர்க்கதரிசி + தரிசனம் = தீர்க்கதரிசனம். ஆதலால் தான் அவன் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். கர்த்தர் தீர்க்கதரிசியின் மூலமாக கூறும் வார்த்தை தீர்க்கதரிசனமாகும். ஆனாலும் ஒரு தீர்க்கதரிசி தன் சுயகருத்துக்களை கூறலாம். நாம் அதை முற்றிலுமாக சார்ந்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. We should not rely upon human judgement. தீர்க்கதரிசி பிரன்காம் கூட, சில இடங்களில் இது என்னுடைய சொந்தக்கருத்து. இது தான் என்னிடம் இப்பொழுது உள்ளது. நான் எப்படி எண்ணுகிறேனோ அப்படியே உங்களிடம் கூறுகிறேன். நீங்கள் அதிலிருந்து வேறுபட்டாலும், நல்லது எனக் கூறுகிறார். சில காரியங்களில் தீர்க்கதரிசி கூட நம்மைப் போல் தன் சுயஅபிப்பிராயத்தையுடையவராகயிருக்கலாம். அவர்கள் தரிசனத்தின்மூலம் உரைப்பதுதான் **கர்த்தர் உரைக்கிறார்** என்றிருந்து அது தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. நாம் அதை எக்காரணம் கொண்டும் நிராகரிக்கக்கூடாது.

21. தாவீதின் வாஞ்சை கர்த்தருக்கு கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும், மகிமையும் உடையதாயிருக்கும்படி மகா பெரிதாயிருக்க வேண்டும் என்பதாகும். 1நாளா.22:5. உனக்கு இக்காலத்துக்குரிய செய்தி உலகத்திலுள்ள சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்ற தாகம், வாஞ்சை உண்டா? ஏனென்றால் இது கர்த்தருடைய வருகை நேரத்தில் உண்டான ஆரவாரச் செய்தியாகும். இது புத்தியுள்ள கன்னிகைகள், புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும் செய்தியாகும், நேரமாகும். இதன் முக்கியத்துவத்தை அறிந்த நீ இந்த செய்திக்காக செய்த தியாகம் தான் என்ன? நீ அறிந்த சத்தியத்தை பிறருக்கும் எடுத்துச்சொல்ல நீ எடுத்துக்கொண்ட முயற்சி தான் என்ன? நீ கடைசிக்கால செய்தி, செய்தி என்று கூறிக்கொண்டு தூங்கிக்கொண்டு தானே இருக்கிறாய்? உன் சுயஅலுவல்களை பார்த்துக்கொண்டு தானே இருக்கிறாய்? நீ உனக்கு சொத்துக்களையும் ஆஸ்திகளையும் சேர்ப்பதில் தானே மும்முரமாயிருக்கிறாய்? இக்காலத்துக்குரிய செய்தியை எடுத்துச்செல்கிறவர்களுக்காவது உதவ, உதவி செய்ய உன் இருதயத்தில் வாஞ்சை உண்டா? எதுவுமில்லையென்றால் நீ சரீரத்தில் செத்த அவயவம் தானே? அப்படியானால் கிறிஸ்துவின் சரீரத்தில் செத்த அவயவத்திற்கு இடமில்லையே?

22. பார், தாவீதின் வாஞ்சையைப் பார்! எங்கள் தேவன் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர், ஆதலால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதாயிருக்க வேண்டுமென்று எண்ணினான். 2நாளா.2:5. அதோடு மட்டுமல்ல நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்க வேண்டும் என எண்ணினான். 2நாளா.2:9. அவனுடைய வைராக்கியத்தைப் பார்! வாஞ்சையைப் பார்!! உனக்கு இக்காலத்துக்குரிய செய்தி மீதுள்ள வைராக்கியம் தான் என்ன? சகோதரனே உன்னுடைய வைராக்கியத்தையும், தாவீதின் வைராக்கியத்தையும் ஒரு தராசில் வைத்து சீர்தூக்கிப் பார். உன் பரிதாபமான நிலை உனக்குப் புரியும். நீயும் உன்னை கிறிஸ்துவின் மணவாட்டியென்று அழைத்துக் கொள்கிறாயே? உனக்கு வெட்கமாகயில்லையா!

23. தாவீதுக்கு தான் ஆலயத்தைக் கட்டப்போவதில்லை, தன் கர்ப்பப்பிறப்பாகிய தன் குமாரன் சாலொமோன் கட்டப்போகிறான், அதுவே தேவனுடைய சித்தம் என்று அறிந்தும், ஆலயம் கட்டவேண்டிய பொருள்களை தன் மரணத்துக்கு முன்னே திரளாய் சவதரித்துவைத்தான். 1நாளா.22:5. தன்னால் இயன்ற மட்டும் தேவனுடைய ஆலயத்துக்கென்று சவதரித்தான். 1நாளா.29:2. பாருங்கள், இது தன்னுடைய ஊழியம் அல்ல என்று அறிந்தபின்னும், அது தனிப்பட்ட ஒரு நபருடைய ஊழியம் அல்ல, மாறாக அது கர்த்தருடைய ஊழியம் என்ற நல்மனப்பான்மையினால் தன்னால் இயன்ற மட்டும் ஊழியத்தைத் தாங்கினான். நீ எழும்பிப் காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடேயிருக்கிறார். 1நாளா.22:16 என்று கூறி சாலொமோனை உற்சாகப்படுத்தினான். கர்த்தரும் தமது விலாவிலிருந்து எடுத்த மணவாட்டியை உற்சாகப்படுத்தி, இதோ உலகத்தின் முடிவு பரியந்தம். சகல நாட்களிலும் நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கூறி உற்சாகப்படுத்துகிறார். மத்.28:20. நாம் அவ்வாறு பிறருடைய ஊழியத்தை தாங்குகிறோமா? அவனுடைய ஊழியம், அவன் பாடு, எனக்கென்ன என்ற மனப்பான்மைதானே நம் மத்தியில் காணப்படுகிறது. ஒருவனுடைய ஊழியத்தைத் தாங்கும் மனப்பக்குவம் நம்மிடையே இல்லையே. பின் எவ்வாறு நாம் நம்மை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக்கொள்ள முடியும்?

24. அடுத்து தேவனுடைய ஆலயத்தின் மேல் வைத்திருந்த வாஞ்சையினால், தான் சவதரித்ததோடு மட்டுமல்ல தனக்கு சொந்தமானவைகளையும் கொடுத்தான். 1நாளா.29:3. இன்றைய ஊழியர்களை, விசுவாசிகளை நன்று கவனியுங்கள். அவர்கள் பிறனுடைய பணத்தில் தங்கள் ஊழியத்தை செய்வதோடு மட்டுமல்ல, கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொண்டு தான் தங்களுக்கு சொத்து, ஆஸ்திகளை சேர்க்கிறார்கள். சபைப் பெயரில் கட்டிடம், வீடு கட்டி தங்கள் உடைமையாக்கிக் கொள்ளுகிறார்கள். அதாவது பிறனுடைய பொருளை இச்சிக்கிரவர்களாயிருக்கிறார்கள். மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் தாவீது அப்படியல்ல, தன்னுடைய ஊழியம் அல்லவென்று அறிந்தாலும் தனக்குச் சொந்தமானவைகளைப் பிறனுடைய ஊழியத்துக்காகக் கொடுத்தான். ஆம், ஆலயத்தின் மேல் வைத்திருக்கிற வாஞ்சையால் அப்படிச்செய்தான். நீ செய்தியின் மேல் உள்ள வாஞ்சையினால் எதைச் செய்தாய்? தீர்க்கதரிசியின் செய்தி, இக்காலத்துக்குரிய செய்தி என்று தம்பட்டம் அடிக்கிறாயே அதற்காக நீ உன்னுடையதிலிருந்து எதைக் கொடுத்தாய்? உன்னுடையத்திலிருந்து நீ எதை இழந்தாய்? நீ செய்திக்காக எதைச் செய்தாய்? மாய்மாலக்காரனே! நீ செய்தியை வைத்து பணம் சம்பாதிக்கத்தானே செய்தாய்? செய்தியின் பேரில் விசுவாசிகளை ஏமாற்றி சொத்து, ஆஸ்திகளை சேகரிக்கத் தானே செய்தாய்? செய்தியின் பெயரில் உன் வாழ்க்கையின் வசதிகளைப் பெருக்கித்தானே கொண்டாய்.

25. தாவீது தன் சிறுமையில் கர்த்தருடைய ஆலயத்துக்கென்று தன்னுடையதைக் கொடுத்தான். 1நாளா.22:14. ஆம், அவன் தன் சிறுமையில் கொடுத்தான். ஆனால் நீயோ சம்பளம் போதுமானதாக இல்லை, தரித்திரம், பஞ்சம், வறுமை எனக் கூறிக்கொண்டேயிருக்கிறாய். கையில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்த முடியவில்லை. பின் எங்கிருந்து தசமபாகம், காணிக்கைக் கொடுப்பது என்று முறுமுறுக்கிறாய். மாசம் ரூ.10,000/- சம்பாதித்தாலும் கைகளில் ஒரு ஆயிரம் கூட மிஞ்சுவது கிடையாது, எங்கிருந்து ஊழியத்தைத் தாங்குவது என்கிறாய். மாய்மாலக்காரனே உனக்கும் தாவீதுக்கும் உள்ள மனப்பான்மையைப் பார். நீ மணவாட்டியென்று கூறிக்கொண்டு உன்னை நீயே பாதாளத்தில் தள்ளுகிறாய்.

26. ஓ தேவனே! எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்தினாலே வாங்கினோம். உமக்கே கொடுக்கிறோம் எனக் கூறி ஜனங்கள் கொடுத்தார்கள். 1நாளா.29:14. அது தான் கிறிஸ்தவப் பண்பு. கிறிஸ்தவ மனப்பான்மை. இன்று ஒருவர் மாதம் ரூ.3,000 சம்பாதிக்கிறார். இதை உம்மிடமிருந்து பெற்றேன், உமது கரத்திலிருந்து வாங்கினேன். இதை இன்று உம்முடைய ஊழியத்துக்காக இக்காலத்துக்குரிய செய்தி தேசம் முழுவதும் பிரசங்கிக்கப்பட, சபை பக்திவிருத்திக்கான ஊழியம் செய்யும் ஊழியர்களுக்குக் கொடுக்கிறேன் என்ற மனப்பான்மை. அப்படிப்பட்டதான மனப்பான்மை என்றாவது உன் உள்ளத்தில் ஏற்பட்டதா? நீ கர்த்தருடைய தசமபாகத்தை அவருக்குக் கொடுக்காது, அவரையே நீ கொள்ளையடிக்கிறவனல்லவா? கர்த்தருக்குரியதை அவருக்குக் கொடுக்காமல், அவருடையதைக் கொண்டு உனக்கு சொத்து, ஆஸ்திகளை சேர்க்கிறவனல்லவா? நீ கர்த்தருடையதை, கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்காது உன் தொந்தியிலே போடும் பெருவயிற்றுப் பெருச்சாளியல்லவா. நீ மணவாட்டியை வழிநடத்துகிறவனா? நீ மணவாட்டியா? உன்னையே சீர்தூக்கிப்பார்!

27. மக்கள் மனப்பூர்வமாக, உத்தம இருதயத்தோடு உற்சாகமாக அள்ளிக்கொடுத்தார்கள். சந்தோஷத்தோடே கொடுத்தார்கள். 1நாளா.29:9, 2கொரி.9:7. இன்று ஊழியக்காரனுக்கு, ஊழியத்துக்கு துக்கத்தோடு ரூ.50/-, ரூ.100/- கொடுக்கிறார்கள். சனியன் வந்துவிட்டானே, கூப்பிடாமல் வீட்டிற்கு வருகிறானே என்றெல்லாம் தூற்றி, பின் காணிக்கையாக ரூ.25/- கொடுக்கிறீர்கள். இந்த ரூ.25/-க்கு அந்த ஊழியக்காரன் கேட்கும் ஏச்சை எழுதுவதற்கே கைநடுங்குகிறது. சில சமயங்களில் ஒருவேளை சோற்றை அவனுக்குப் போட்டுவிட்டு, அதற்காக உள்ளத்தில் சாப்பாட்டு நேரத்தில் சனியன் வந்துவிட்டானே என்று கூறி முறுமுறுக்கிறீர்கள். உண்மையும், உத்தமுமான ஊழியக்காரர்கள் நிலை இவ்வளவு பரிதாபமாகயிருக்கிறது. ஆனால் நேர்மையற்று, மாய்மாலம் பண்ணும் ஊழியக்காரன் ஆயிரம், பதினாயிரம் பெற்று ஆசீர்வாத ஜெபத்துடன் விடைபெறுகிறார்கள். அடுத்து ஊழியக்காரன் ஜெபித்தான், வயிற்றுவலி நீங்கிற்று, ஊழியர் ஜெபத்தில் முதுகுவலி நீங்கிற்று, ஊழியன் உபவாச ஜெபித்ததினால் கடன்பிரச்சனை நீங்கிற்று எனக் கூறி இம்மைக்குரிய நன்மைகளை பெற்று பல ஆயிரங்கள் கொடுக்கிறீர்கள். 1கொரி.1519. தேவனுடைய காரியத்திற்கென்று, கர்த்தருடைய ஊழியத்துக்கென்று, தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த காரியங்களுக்கு கொடுக்காவிட்டால் உன் வீட்டில் வியாதி வந்துவிடும், பட்டினி வந்துவிடும், சாவு வந்துவிடும்; நீ கொடுத்தால் உனக்கு இரட்டிப்பான பலன் கிடைக்கும் என மிரட்டுகிறவர்களுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். ஆனால் அன்றோ மக்கள் எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல், உம்மிடமிருந்து பெற்று உமக்கே கொடுக்கிறோம் என்று சந்தோஷத்தோடே கொடுத்தார்கள். அவன் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாக உள்ளவனா அல்லது நீயா, உன்னையே நிதானித்துப்பார்!

28. அதோடு மட்டுமல்ல தங்கள் திரானிக்கும் மிஞ்சிக் கொடுத்தார்கள். 2கொரி.8:3. தங்களது ஜீவனத்துக்குரிய அனைத்தையும் அந்த விதவை போட்டுவிட்டாள். லூக்.21:4 என்று வாசிக்கிறோம். அடுத்த நேரத்திற்கு சாப்பிடுகிறதற்கு வழியில்லை. கைகளில் சில காசுகள் தான் உண்டு. பரவாயில்லை. கர்த்தர் கைவிடமாட்டார் நிச்சயமாக போஷிப்பார், வழிநடத்துவார் என்ற உறுதியான நம்பிக்கையினால்

கைகளில் இருந்த அந்த சில காசுகளையும் கர்த்தருக்கென்று அந்த விதவை கொடுத்தாள். நீ ஒரு ஊழியக்காரனுக்குக் கொடுப்பது அவனுக்கு அல்ல. அதைக் கர்த்தருக்கென்று கொடுக்கிறாய். நீ அவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதன் பலனை அடையாமற்போவதில்லை என்று வேதம் கூறுகிறது. 2கொரி.8:3, லூக்.21:4.

29. அந்நாட்களில் விசுவாசிகள் கர்த்தருடைய ஊழியத்துக்கு, ஊழியக்காரனுக்கு, கர்த்தருடைய காரியங்களுக்கு மனப்பூர்வமாய், உற்சாகமாக, தங்கள் திராணிக்கும் மிஞ்சி, தங்கள் ஜீவனத்துக்குரிய அனைத்தையும் கொடுத்தார்கள். நாம் அவ்வண்ணமாகக் கொடுப்பதுமில்லை, மாறாக கர்த்தருடையதைத் திருடுகிறோம். இந்த திருட்டுக்கூட்டத்திற்கு இக்காலத்துக்குரிய செய்தியில் குறைவு இல்லை. நீ கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவ்வப்போது ரூ.50/-, ரூ.100/- கொடுத்தாலும் ஐயோ! என் மூதாதையரின் பணம், பணம் என்று பணத்தின் மேலே குறிக்கோளாகயிருந்து, உற்றார் உறவினர் நண்பர்கள் கஷ்டத்தில் உதவாது சுயநலவாதியாக இருந்ததால் புழுபுழுத்து செத்தார்கள், நானும் அப்படியே செத்துவிடக்கூடாது என்ற பயத்தினால் தானே அவ்வப்போது ரூபாய் 10/-, 100/- என்று கொடுக்கிறாய். உன் மாய்மாலத்தை, உன் ஏமாற்று வித்தைகளை கர்த்தர் அறியாரோ? நீ மனப்பூர்வமாகக் கொடுத்தால் தானே ஆசீர்வாதம். நீ ஒரு பிரதிபலனை எதிர்பார்த்து கொடுப்பதால் உனக்கு பலன் என்ன?

30. வேதமானது திருவசனத்தை உபதேசிக்கிறவனுக்குக் கொடு. கலா.6:6. ஞானநன்மைகளை விதைக்கிறவனுக்கு சரீர நன்மைகளைக் கொடு. 1கொரி.9:11. சுவிசேஷத்தைப் பிரசங்கிறவனுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டு. 1கொரி.9:14 என்று கூறுகிறது. ஆனால் நாம் சுவிசேஷகனை நம்முடைய சரீர நன்மைகளினால் தாங்குகிறோமா? சகோதரனே, செய்தித்தொகுப்பு ஆத்துமாவுக்கு மிக்க பிரயோஜனமாயிருக்கிறது என சாட்சி கூறுகிறோம். ஆனால் அந்த ஊழியத்தை செய்வதற்கு அந்த சகோதரன் எத்தனை பாடுகள் அனுபவிக்கிறார், அவருக்கென்று எவ்வளவு செலவுகள் உண்டு. அதில் ஒரு பங்கை நான் தாங்கவேண்டுமே; நாம் ஞான நன்மைகளை அனுபவிக்கிறது போல அநேகர் அனுபவிக்க வேண்டுமே என்ற நல்லெண்ணம் ஏன் உங்கள் மனதில் உண்டாகிறதில்லை? ஏனென்றால் நீங்கள் சுயநலவாதிகள். ஆனால் தாவீது அப்படியல்ல. ஊழியம் தன்னுடையது அல்ல என்றாலும், அந்த ஊழியத்தைத் தாங்க தன்னால் இயன்ற மட்டும் உதவிகள் செய்தான். மக்களும் உற்சாகத்துடன் மனப்பூர்வமாகக் கொடுத்தார்கள். அவர்கள் மணவாட்டியா அல்லது நீயா? உன்னையே நீ சீர்தூக்கிப்பார்.

31. ஆலயத்தைக் கட்ட, அதின் மாதிரியை கர்த்தர் தம்முடைய கரத்தால் எழுதிக்கொடுத்தார். அந்த மாதிரியின்படி ஆலயம் கட்டப்பட்டது. 1நாளா.28:11. மணவாட்டி என்று மார்புதட்டிக்கொள்கிறவனே, உன்னுடைய வாழ்க்கையானது கர்த்தர் கொடுத்த இக்காலத்துக்குரிய செய்தியின்படி அமைந்துள்ளதா? உன் மனைவி மக்களை ஆதாயப்படுத்தாமல், உன் சரீரத்தின் ஒரு பாகத்தை ஆதாயப்படுத்தாமல், அவள் ஒரு அவிசுவாசியாயிருக்கையில், உன் சரீரத்தில் ஒரு பாகம் அவிசுவாசியாயிருக்கும்போது, உன் பிள்ளைகள் பாவணை விசுவாசிகளாயிருக்கும்போது நீ கர்த்தர் என்னை ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தைக் கொடுத்துள்ளார் என்று கூறி உன்னை நீயே வஞ்சித்துக்கொள்கிறாய். தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் இக்காலத்துக்குரிய செய்தியின் பிரகாரம் உன் வாழ்க்கை அமைந்துள்ளதா? ஊழியம் அமைந்துள்ளதா? உன் அழைப்பை முதலில் உறுதிப்படுத்து. பின் ஊழியம் செய்.

32. மணவாட்டி, மணவாட்டி என்று உன்னை அழைத்துக்கொள்ளுகிறாய். பெண்கள் வேலைசெய்ய வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது. அவள் வீட்டில் தரித்திருக்கிறவளாயிருக்க வேண்டும் என்று கர்த்தருடைய வேதமும், இக்காலத்துக்குரிய செய்தியும் கூறுகிறது என்பதை நீ நன்கு அறிவாய். அப்படியிருந்தும் தேவனுடைய வார்த்தைக்கும், செய்திக்கும் உன்னை அர்பணிக்காது, உன் மனம் போல் நடந்து, சுயஇச்சைகளின்படி நடந்து உன் மனைவியை வெளியே வேலைக்கு அனுப்பி நீ உன்னை மணவாட்டி, மணவாட்டி என்றும், ஊழியக்காரன் என்றும் அழைத்துக்கொள்ள வெட்கமாகயில்லையா? கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை போஷித்து காப்பாற்றுகிறது போன்று, நீ உன் சரீரமாகிய உன் மனைவியை போஷித்து காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறாயே? நீ உன் சம்பளம் உனக்கு போதுமானதாகயில்லையென்று கூறலாம். ஆனால் நீ வாங்கும் சம்பளத்தில் எத்தனையோ அவிசுவாசிகள் தங்கள் குடும்பத்தை நடத்துகிறார்களே. உன் இல்லற வாழ்க்கை எபே.5:22-23ன் படி கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாகயிருக்கிறதா என்று பார்த்துக்கொள். அவ்வாறாக இல்லாவிட்டால் உடனே திருத்திக்கொள். உன் மனைவியை வெளியே வேலைக்கு அனுப்பாதே!

33. நம் மத்தியில் ஒரு ஊழியக்காரனை அறிவேன். கடந்த 10/15 ஆண்டுகளுக்கு முன் அவருடைய மனைவியை அவர் வேலைக்கு வெளியே அனுப்பிவந்தார். சத்தியத்தைக் குறித்து பேசிய போது சகோதரனே, கொஞ்சம் கடன் பிரச்சனை உண்டு. அது தீரும் வரை மனைவியை வெளியே வேலைக்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளேன். கடன் பிரச்சனை தீர்ந்த பிறகு நிறுத்திவிடுவேன் என்றார். நானோ சகோதரனே உங்கள் கடன் பிரச்சனைகள் தீரப்போவதுமில்லை, நீங்கள் உங்கள் மனைவியை வேலையை விட்டு நிறுத்தப்போவதுமில்லை என்று கூறினேன். ஆம், அவ்வண்ணமாகவே இன்றுவரை நடந்து வருகிறது. அவர்களுடைய கடன்பிரச்சனை தீரவுமில்லை தன் மனைவியை வேலையிலிருந்து நிறுத்தவுமில்லை. முதலாவது தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் கீழ்படி. கர்த்தர் உன் காரியங்களை பார்த்துக்கொள்வார். கர்த்தர் உன்னிடத்தில் முதலாவது கீழ்படிதலையே எதிர்பார்க்கிறார். முதலில் கீழ்படிந்துப் பார், பின் ஆசீர்வாதம் தானாகவே உனக்கு வந்து சேரும்.

34. சாலொமோன், கர்த்தருடைய கரத்தினால் எழுதிக்கொடுக்கப்பட்ட மாதிரியின்படி ஆலயத்தைக் கட்டினான். நம்முடைய வாழ்க்கை கர்த்தர் நமக்குக் கொடுத்த அவருடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தியின்படி அமைந்திருக்க வேண்டும், அப்பொழுதுதான் நீ அவர் வாசம் செய்யும் ஆலயமாகக் காணப்படுவாய்.

1) மனைவியே உன் சொந்த புருஷனுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்படிகிறாயா? எபே.5:22-24. உன் மனம் போன போக்கில் நடக்கிறாயா? பாஸ்டருக்குச் செவிகொடுத்து, புருஷனை அசட்டைபண்ணுகிறாயா?
2) புருஷர்களே உங்கள் மனைவிகளிடத்தில் அன்பு கூறுகிறீர்களா. எபே.5:25 அல்லது பிறனுடைய மனைவியிடத்தில், அலுவலகத்தில் வேலை செய்யும் மற்றொரு பெண்களோடு அன்பு கூறுகிறாயா?
3) புருஷர்களே உங்கள் மனைவியை உங்கள் சொந்த சரீரமாக பாவிக்கிறீர்களா. எபே.5:25. உன் மனைவி உன் சரீரத்தின் ஒரு பாகமல்லவா. அவளை உன் இச்சைக்கு மாத்திரமே பயன்படுத்தி

வருகிறாயா? அல்லது அவளை உன் சரீரத்தின் ஒரு பாகமாக நினைத்து அன்பு செலுத்துகிறாயா?

4) புருஷர்களே உங்கள் கைகளின் பிரயாசத்தினால் உங்கள் மனைவிகளை போஷித்து காப்பாற்றுகிறீர்களா? எபே.5:29. அல்லது அவளுடைய கையின் பிரயாசத்தினால் நீ வாழுகிறாயா? மனைவி வெளியே சென்று வேலை செய்து வாழ்க்கைக்காக சம்பாதித்து வர, அவளுடைய கைகளின் பிரயாசத்தினால் நீ வாழ்ந்துகொண்டு, ஊழியம் ஊழியம் என்று ஊர்சுற்றித் திரிகிறாயா? உனக்கு வெட்கமாக இல்லையா. ஊழியம் உனக்கு ஒரு கேடா? கர்த்தருடைய வார்த்தையின்படி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

35. நீயும் உன் மனைவியும் ஒரே மாமிசமாயிருக்கிறீர்களா? எபே.5:31. நீயும் உன் மனைவியும் ஒரே நம்பிக்கையில் இருக்கிறீர்களா? நீயும் உன் மனைவியும் ஒரே விசுவாசத்தில் இருக்கிறீர்களா? நீயும் உன் மனைவியும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறீர்களா? செய்தியை முற்றிலும் விசுவாசிக்கிறீர்களா? வித்தியாசமான எண்ணங்கள் உண்டா? வித்தியாசமான, மாறுபட்ட கருத்துக்கள், எண்ணங்கள் இருக்குமானால் நீங்கள் ஒரே சரீரம் அல்ல. நீங்கள் உங்களை சீர்படுத்திக்கொள்ளுங்கள். ஒரே மாம்சம் என்பது ஒரே விசுவாசம், ஒரே எண்ணம், ஒரே சிந்தை, ஒரே நம்பிக்கை ஆகும்.

36. சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்கு காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனுடைய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த களத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட துவங்கினான். 2நாளா.3:1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட 480ம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின் மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப் மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவன் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் துவங்கினான். 1இரா.6:1. இந்த எபூசியனாகிய ஓர்னானின் களம் குறித்து நீங்கள் 1நாளா.21ம் அதி. மற்றும் 22:1ம் வசனத்திலும் மற்றும் 2சாமு.24வது அதி.யிலும் வாசிக்கலாம். இது ஆபிரகாம் ஈசாக்கை தகனபலியாகயிடச்சென்ற மலை. ஆதி.22:2.

37. அடுத்து ஆலயக்கட்டுமானப் பொருட்கள் பற்பல இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டது. 1நாளா.22:2,4. நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப் பட்டோம். 1கொரி.12:13. கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயுள்ளவர்கள் உலகத்தின் பற்பல பாகத்திலிருந்து, பற்பல ஸ்தாபனசபைகளிலிருந்து கொண்டுவந்து ஒன்றாக இணைக்கப்பட்டவர்கள். Body members of Christ are brought together from different denominations and from different parts of the world. அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளை அழைத்திருக்கிறாரே. ரோ.9:24-26, எபே.2:11-22, கொலோ.3:10-15. நாம் பற்பல இடங்களில் ஜீவனம் பண்ணினாலும் ஒரே சரீரத்துக்குள்ளாக இணைக்கப்பட்டவர்கள். நாம் ஒரே சரீரத்துக்குள்ளாக பற்பல இடங்களில், மூலை முடுக்குகளில் உள்ள சபைகளில், பத்தி 2ல் கூறப்பட்டுள்ள சபைகளில் இணைக்கப்பட்டவர்கள் அல்ல. நாம் காணக்கூடாத கிறிஸ்துவின் சரீரத்துக்குள் (Mystical body) இணைக்கப்பட்டவர்கள்.

38. இந்தக் காணக்கூடாத சரீர இணைப்புக்குத்தான் ஐந்துவகை ஊழியம். ஐந்துவகை ஊழியம் ஒரு லோக்கல் சபைக்குரியதல்ல. ஆனால் அந்த லோக்கல் சபையில் மணவாட்டியிருக்கலாம். கர்த்தர் எப்படியாவது அவளை அந்த ஐந்துவகை ஊழியங்களைக் கொண்டு போஷிப்பார். சபையானது பாஸ்டரது ஊழியத்தை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. அப்படியானால் அது ஒரு மனிதனுக்கு உட்பட்ட ஸ்தாபன அமைப்பு ஆகிவிடும். ஒரு மனுஷனுக்கு சபை அடிமையாகிவிடும். சபையில் ஐந்துவகை ஊழியத்தையும் அனுமதிக்க வேண்டும். நாம் ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்கள் என்று கருதுபவர்களைக் கொண்டு தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை கேட்க வேண்டும். சபை ஐந்துவகை ஊழியத்தினால் போஷிக்கப்படவேண்டும். ஒரு லோக்கல் சபையில் மணவாட்டிக் காணப்படுவாளாகில், நிச்சயமாகக் கர்த்தர் அங்கு ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்களைக் கொண்டுவந்து அவளை போஷிப்பார். மணவாட்டியே இல்லாத லோக்கல்சபை, பாஸ்டரால் மட்டுமே போஷிக்கப்பட்டு, தனி ஒரு மனுஷனுக்கு அடிமையான, அடிமைத்தனத்தற்குள்ளான சபையாயிருக்கும். அது ஆகாரின் சபை. அவள் தன் பிள்ளைகளோடே கூட அடிமைப்பட்டிருக்கிறாள்.

39. ஆலய அஸ்திபாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கல் பெரிதும் விலையேறப்பெற்றதுமாயிருந்தது. 1இரா.5:17. அந்தக் கல் மனுஷரால் தள்ளப்பட்ட கல். 1பேது.2:4. ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்ட கல். 1பேது.2:4. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. 1கொரி.3:11.

40. ஆம் பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரம், உங்கள் ஊழியத்தன் அஸ்திபாரம் அனைத்தும் கிறிஸ்துவாயிருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் உங்கள் உடன்பிறப்புகளால், உங்கள் இனஜனபந்துக்களால், உடன் விசுவாசிகளால், ஊழியக்காரர்களால், சுருக்கமாகக் கூறப்போனால் நீங்கள் அனைவராலும் தள்ளப்பட்ட ஒரு நிலை அடைவீர்கள். ஆம் நீ மனுஷர்களால் தள்ளப்பட்ட நிலைக்கு வரும் பொழுது தான், நீ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்ற நிலை அடைவாய். நீ அனைவராலும் நேசிக்கப்படுவாயானால் நீ தள்ளப்பட்ட நிலை அடைய முடியாது. அது உலக சிநேகம்.

41. பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையில், ஊழியத்தின் அஸ்திபாரத்தை கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது போடுங்கள். உங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரத்தை உலகப்பதவி, பொருளாதார நிலை, பணச் செல்வாக்கு, சமுதாயச் செல்வாக்கு இவற்றின் மீது போடாதேயுங்கள். உங்கள் ஊழியத்தின் பாதையில் உங்கள் அஸ்திவாரத்தை விசுவாசிகளின் பண ஆதரவு மீது, தசமபாக காணிக்கை மீது, வெளிநாட்டில் இருந்து வரும் உதவிகள் மீது போடாதீர்கள். உன் வாழ்க்கை, ஊழிய அஸ்திபாரத்தை நீ கன்மலையாகிய கிறிஸ்து மீது போடும்போது பெருமழை சொரிந்தாலும், பெருவெள்ளம் வந்தாலும், காற்றடித்து, உன் வாழ்க்கை பாதையில் உன் ஊழியப் பாதையில் மோதினாலும் அது ஒருக்காலும் விழாது. அது நிலைத்து நிற்கும். யார் உன்னை என்ன சொன்னாலும் அது உன்னை பாதிக்காது. உனக்கு எதிராக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காது போகும். ஆனால் உன் அஸ்திபாரத்தை மேற்கூறிய காரியங்கள் மீது போடுவாயானால் பெருமழை சொரிந்து,

பெருவெள்ளம் வந்து, காற்றடித்து உன் மேல் மோதும்போது நீ விழுந்துபோவாய். இன்று வெளிநாட்டு பணத்தை நம்பி ஊழியம் செய்தவர்கள் அநேகர் விழுந்து போனார்கள். அற்புத அடையாளங்களை காண்பித்து அதன் மூலம் பணம் சம்பாதித்தவர்கள் விழுந்து போனார்கள். அற்புத அடையாளங்களை நம்பி வாழ்ந்தவர்கள் விழுந்து போனார்கள். ஆனால் கிறிஸ்துவின் மீது தன் முழு நம்பிக்கையையும் வைத்து, அவரை அஸ்திபாரமாகக் கொண்டு ஊழியம் செய்தவர்கள் நிலைத்து நிற்கிறார்கள். அல்லேலூயா!

42. இப்பொழுது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அந்தக் கல், மனுஷரால் தள்ளப்பட்ட கல்லாக இருப்பதால் சகோதரனே நீயும் அனைவராலும் கைவிடப்பட்டவனாயிருப்பாய். அன்று பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி என்னை நோக்கி நீ தனித்துநிற்க வேண்டிய நிலை உருவாகிவிடும். ஆதலால் உன் வழியை திருத்து, எச்சரிக்கை என்றார். நான் தனித்து நிற்க வேண்டியதாயிருக்கும் என்ற நிலையை அறிந்தவனாகவே என் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறேன் என்றேன்.

43. அன்று பவுலும் தன்னோடு கூட ஒருவனும் இருக்கவில்லை, எல்லாரும் என்னை கைவிட்டார்கள், அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக, கர்த்தரோ எனக்கு துணையாக நின்றார் என்கிறான். 2தீமோ.4:16. அவ்வண்ணமாகவே தான் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவன், ஊழியக்காரன் வாழ்க்கை இருக்கும். பவுல் மட்டுமல்ல, எலியாவும் கூட நான் மட்டும் மீதியாயிருக்கிறேன் என்றான். ரோ.16:3,4. ஆக ஊழியத்தின் பாதையில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு ஊழியக்காரனும் தன் ஊழியத்தில் தனித்து நிற்க வேண்டிய நிலை உண்டாகும். அது அவன் கர்த்தரை மட்டும் சார்ந்திருக்கிறான் என்று பொருள்படும். கர்த்தர் அவனோடு இடைபடுகிறார் என்பதாகும்.

44. அடுத்து இந்த அஸ்திபாரக்கல் பரிட்சிக்கப்பட்ட கல். ஏசா.28:16, 1கொரி.3:12-15. சகோதரனே, உன்னுடைய விசுவாசம் ஆபிரகாமைப் போன்று சோதிக்கப்பட வேண்டும். ஆதி.22:1,5. சகோதரியே, உன் விசுவாசம் கானானிய ஸ்திரீயைப் போன்று சோதிக்கப்பட வேண்டும். மத்.15:22-28. பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2தீமோ.3:12. நாம் அநேக உபத்திரவத்தின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும். அப்.14:22. என்று வேதத்தில் வாசிக்கிறோம். அதோடு மட்டுமல்ல நமக்கு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் அருளப்பட்டிருக்கிறதென பிலி.1:29ல் வாசிக்கிறோம். ஆக கிறிஸ்தவ வாழ்க்கையே விசுவாசம் மற்றும் பாடுகளை உடையதாயிருக்கும். சுகபோகமான வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையல்ல. ஆடம்பரமான வாழ்க்கை கிறிஸ்தவனுடையவது அல்ல.

45. அடுத்து அந்தக் கல் பணித்தீர்ந்து கொண்டுவரப்பட்டது. 1ராஜா.6:7, 1நாளா.22:2. நாம் குறைவுள்ள கற்களாகயிருக்கிறோம். ஆனாலும் தெரிந்துகொள்ளப்பட்ட கற்களாயிருக்கிறோம். நாம் அவயவங்களாக சபையில் முற்றிலும் தகுதியாக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் கொண்டுவந்து பொருத்தப்படுகிறோம். அதற்காகவே கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தியடைய கர்த்தர் ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தி எபே.4:11-13 ஐந்துவகை ஊழியங்களில் பலன்களைக் கொண்டு கிறிஸ்துவின் சரீரத்தில் பணிதீர்ந்த கற்களாகக் கொண்டு நம்மைப் பொருத்த தகுதிப்படுத்துகிறார். பாஸ்டர் ஊழியத்தை மட்டும் கொண்டு நம்மை தகுதிப்படுத்த முடியாது. சபை பக்திவிருத்திக்கு ஐந்துவகை ஊழியம் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஐந்துவகை ஊழியங்களைக் கொண்டே தகுதிப்படுத்தவேண்டும். இந்த ஐந்துவகை ஊழியம் ஒரு லோக்கல் சபையில் காணப்படாது. ஏனென்றால் கிறிஸ்துவின் சரீரம் காணக்கூடாத சரீரம். (Mystical body) ஆகும். ஆனால் இந்தக் காணக்கூடாத சரீரத்தின் அவயவம் ஒரு லோக்கல் சபியல் இருக்கலாம், இல்லாமலும் போகலாம். கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவம் ஒரு லோக்கல் சபையில் இருக்குமானால் கர்த்தர் நிச்சயம் அந்த அவயவத்தை ஐந்துவகை ஊழியங்களைக் கொண்டு போஷிப்பார். அது பாஸ்டர், பாஸ்டர் என்றே சுற்றிக்கொண்டிருக்காது. எனக்கு இதர ஊழியங்களின் ஆகாரமும் தேவையென கத்தும். பால், இது மட்டும் போதாது, மாம்ச ஆகாரமும் தேவை என ஆர்பரிக்கும். அந்த சத்தத்துக்கு மேய்ப்பன் செவிகொடுத்து ஏற்ற ஆகாரத்தைக் கொண்டுவந்துக் கொடுப்பான். ஐந்துவகை ஊழியம் அல்லாது அந்தக் கல் பணித்தீர்ந்த கல்லாகிவிடாது. அதாவது அந்தக் கல் பணித்தீர்ந்தக் கல்லாக்க ஐந்துவகையான ஆசாரியர்கள் அதில் பணிசெய்ய வேண்டும்.

46. மேலும் மணவாட்டி ஏழு படிகளைக் கடந்து செல்ல வேண்டும். அதாவது 7 Steps to perfection. 2பேது.1:5-8. நீ விசுவாசத்தை மட்டும் உடையவனாய் இருப்பாயாகில் உன் மீது தலைக்கல் அமராது. நீ உன் விசுவாசத்தோடு தைரியத்தை மட்டும் கூட்டிச் சேர்த்தால் அதன் மீதும் தலைக்கல் அமராது. விசுவாசம், தைரியத்தோடு ஞானத்தைக் கொண்டு கூட்டிச் சேர்த்தாலும் அதன் மீது தலைக்கல் அமராது. விசுவாசம், தைரியம், ஞானத்தோடு இச்சையடக்கத்தையும் கூட்டிச் சேர்த்தால் அதன் மீதும் தலைக்கல் அமராது. மேலும் இத்துடன் நீ பொறுமையைக் கூட்டிச் சேர்த்தாலும் தலைக்கல் வந்து அமராது. பொறுமையுடன், தேவபக்தியை கூட்டிச் சேர்த்தாலும் தலைக்கல் அதன் மீது அமராது. மேற்கூறிய அனைத்து பண்புகளுடன் நீ சகோதரசிநேகத்தையும் உடையவனாய் காணப்படவேண்டும். அப்பொழுது தான் பரிசுத்தஆவி உன் மீது அமர்ந்து உன்னை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி தலைக்கல் உன் மீது வந்து அமர ஆவனச் செய்யும். சரீரம் மேற்கூறிய அனைத்து பண்புகளுடனும் இணைந்து, இசைந்து காணப்படும் போது அதன் மீது அன்பாகிய தலைக்கல் அமரும். மற்றபடி அமரவே அமராது.

47. இதற்கு உதாரணமாக ஒரு இரும்பு உன்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீ அதில் ஒரு புஸ் (Bush), அந்த புஸ்க்குள் சரியாக ஒரு கோல் (Rod) பொருந்தும்படி செய்ய வேண்டும். அதற்கு முதலில் நீ ஒரு புஸ், மற்றும் அதற்குள் நுழைய ஒரு கோலைப் லேத் மிஷினில் கடைந்தெடுக்க வேண்டும். ஆனாலும் அது சரியாகப் பொருந்தாது. ஆதலால் நீ அந்த இரண்டையும் கிரைண்டிங் மிஷினில் கொடுத்து கிரைண்ட் பண்ணி பொருத்த வேண்டும். அதுவும் முற்றிலும் சரியாகப் பொருந்தாது. இதனால் மிக மிக துல்லியமாகப் பொருந்த கோனிங் ஆபரேஷன் (Honning operation) என்ற ஒரு ஆபரேஷன் உண்டு. அந்த கோனிங் ஆபரேஷன் செய்யும் போது அந்த புஸ்க்குள் அந்தக் கோல் மிகத் துல்லியமாகப் பொருந்தும். இன்று பரிசுத்தஆவி, சரீரத்தில் வந்து தலைக்கல் மிக மிக துல்லியமாக வந்து பொருந்த அந்த கோனிங் ஆபரேஷனை செய்து சபையைச் சரிப்படுத்தி வருகிறது. பரிசுத்தஆவியின் பணி முடிந்தவுடன் தலைக்கல் வந்து சரியாக சரீரத்தில் இணைந்துவிடும்.

48. நாம் சபைகூடுதலுக்கு சென்று வருகிறோம். நம்முடைய தவறு எங்கு உள்ளது என்று கண்டு அதை சரிசெய்து கொள்வதற்காகவே நாம் ஆலயத்திற்கு வருகிறோம். ஏனென்றால் நாம் சிறு சிறு தவறுகளை செய்கிறவர்களாயிருக்கிறோம். வேறு ஏதாகிலும் ஓர் நோக்கத்திற்காக நாம் ஆலயத்திற்கு வருகிறோம் என்றால் இங்கிருந்து பிரயோஜனமான ஏதொன்றும் நாம் பெற்றுக்கொள்ள இயலாது. நம்முடைய தவறான பாகம் எது என்றும், நம்முடைய பெலவீனம் எது என்றும் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதையும் கண்டு நம்முடைய நம்பிக்கையை பலமுள்ள ஒருவரிடம் ஒப்படைக்கும் நோக்கத்திற்காக கண்டிப்பாக சபைக்கு வரவேண்டியவர்களாயிருக்கிறோம். (பரிபூரண பலவீனத்தில் விளங்கும் பரிபூரண பலம். பக்கம் 16, பத்தி 43)

49. பாருங்கள் ஒரு கம்பெனியில் ஒரு மிஷின் செய்கிறார்கள். அந்த மெஷினை செய்துமுடிக்க அதில் பலவிதமான திறமையுடைய அதாவது மெக்கானிக்கல், எலெக்டிரிகல், எலெக்ரானிக்ஸ் போன்றவற்றில் திறமையுள்ள பொறியாளர்கள் வந்து பங்கேற்று அந்த மெஷினை உருவாக்க வேண்டும். அவ்வண்ணமாகவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய வேண்டுமானால் ஐந்துவகை ஊழியர்களும் அதில் பணிபுரிய வேண்டும். ஒரு பிரிவைச் சார்ந்த பொறியாளரினால் (பாஸ்டர்) அந்த மெஷினை உருவாக்க முடியாது. ஒருக்காலும் முடியாது. உங்கள் மத்தியிலுள்ள பாஸ்டர்கள் ஒருவராலும் அதில் தனிப்பட்ட முறையில் பணிச்செய்து, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பக்திவிருத்தி அடையச்செய்ய முடியாது. பாருங்கள், பல்லாவரம் பகுதிகளில் ஒரு சபையிலிருந்து பிரிந்து பிரிந்து இன்று ஆங்காங்கு சந்து பொந்துக்களில் இரு கைவிரல்களுக்கு மேல் சபைகள் காணப்படுகின்றன. ஊழியர்கள் கழிவுப்பொருட்கள் குவியல் (Scrap heaps) மாதிரி குவிந்து கிடக்கின்றனர். காரணம் என்னவென்றால் அவர்கள் தேவனுடைய திட்டத்தில் சரியாக அமைந்திருக்கவில்லை. அவர்கள் தங்கள் ஊழியத்தில், வாழ்க்கையில் கிறிஸ்துவை பிரதிபலிக்கும் முன்பே, கிறிஸ்துவினுடைய கிரியைகளைப் பிரதிபலிக்க முயற்சிக்கிறார்கள். அது தான் நமது ஊழியர்கள் மத்தியில் காணப்படும் ஒரு பெரிய தொல்லையாயிருக்கிறது. ஆதலால் தான் சபை பக்திவிருத்தியடையாது நாளுக்கு நாள் உடைகிறது. இது குறித்து நீங்கள் மேலும் அறிய விரும்பினால் ***ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி*** பக்கம் 32,33யை தியானியுங்கள்.

50. அடுத்து ஆலயத்தின் உட்புறம் தளம் தொடங்கி சுவர் மேல் மச்சு மட்டும் கேதுரு மரம்.1இரா.6:13-18 லீபனோன், காடுகள் (Forest) 1ராஜா.5:6 மற்றும் மலைகள் (Mountains) நியாயாதி.3:3 நிறைந்த வனம். இந்த லீபனோனை சென்று பார்க்க மோசே விரும்பினான். உபா.3:25. ஆனால் கர்த்தர் அவனுடைய கண்களினால் மட்டும் காண அனுமதித்தார். உபா.3:20. லீபனோனிலிருந்து கேதுரு மரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், வாசனை மரங்களையும் தாவீது கொண்டுவந்தான். 2நாளா.2:8. தேவதாரி விருட்சங்கள் Fur tree என்றும், வாசனை மரங்கள் Algum tree என்றும் அழைக்கப்படுகிறது. இவைகள் நமது சந்தன மரத்திற்கு ஒப்பானவைகள். உஷ்ணப்பிரதேசமாகிய லீபனோன் நாட்டில் வளரும் கேதுரு மரம் மிக உறுதியானது. Warmer the country harder is the timber. இது ஆவியில் அனலுள்ள மனுஷனைக் குறிக்கிறது. ஆலயத்தின் உட்புறம் தளம் தொடங்கி சுவர் மேல் மச்சு மரம் மட்டும் கேதுரு மரம். தேவன் வாசம் செய்யும் ஆலயமாக காணப்படும் ஒருவன் ஆவியில் அனலாய் காணப்படுவான் என்பதை எடுத்துக் காட்டுகிறது. It represents the warm spirit filled man. உதாரணமாக: கர்த்தருடைய ஆவி சிம்சோன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், தனக்கு எதிராக வந்த கெர்ச்சிக்கிற பாலசிங்கத்தை ஒரு ஆட்டுக்குட்டியை கிழித்துப்போடுகிறது போல கிழித்துப் போட்டான் என நியாயாதி 14:5,6 வசனங்களில் வாசிக்கிறோம். மேலும் ஸ்தேவானுடன் சிலர் எழும்பி தர்க்கம் பண்ணின போது அவன் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாது போயிற்று என அப்.6:10ல் வாசிக்கிறோம். பொதுவாக தேவனுடைய பிள்ளைகளை ஒருவனும் எதிர்த்துப்பேச, எதிர்த்து நிற்கக் கூடாத வாக்கையும், ஞானத்தையும் தேவன் அவர்களுக்குக் கொடுக்கிறார். லூக்.21:15. கேதுரு மரத்தின் உறுதி, நமது விசுவாச வலிமையைக் குறிக்கிறது. விசுவாச கிரியைகள் நம்மில் நிறைவேற வேண்டும். 2தெச.1:12.

51. அடுத்து ஆலயத்தைக் கட்ட வாசனை மரங்களை உபயோகித்தான். 1இரா.10:11. வாசனை மரம் அன்பு மணத்தைக் குறிக்கிறது. கிறிஸ்து நமக்காகத் தம்மைத்தாமே தேவனுக்கு சுகந்த வாசனையின் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததினால் எபே.5:2, நாம் நம்மை கிறிஸ்துவுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாக ஒப்புக்கொடுத்து ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும். யோ.15:12. 1கொரி.13வது அதி.யில் குறிப்பிடப்பட்ட அன்பின் தன்மைகள் நம்மிடத்தில் காணப்பட வேண்டும்.

52. பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பை நாம் தரித்துக்கொள்ள வேண்டும். Put on love which is bond of perfection. கொலோ.3:14. ஆம், நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாய் இருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்பதே நமக்குக் கொடுக்கப்பட்ட புதிதான கட்டளை. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்போமானால், அது நாம் அவருடைய சீஷர்கள் என்பதை காட்டிக்கொடுக்கும். யோ.13:34,35. நீங்கள் மத்.26:57-73 வசனங்களை வாசித்தால் பேதுருவின் பேச்சு, அவன் இயேசு கிறிஸ்துவைச் சார்ந்தவன் என்பதைக் காட்டிக் கொடுத்தது. அதுபோல் நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது நாம் அவருடையவர்கள் என்பதைக் காட்டிக்கொடுக்கும். இன்று மணவாட்டி, மணவாட்டி; கடைசிக்காலச் செய்தி, கடைசிக்காலச் செய்தி; இதோ பறந்துவிடுவேன், பறந்தே விட்டேன் என்று வீண்பேச்சு பேசுகிறோமேயன்றி அன்பு எள்ளளவு கூட நம் உள்ளத்தில் காணப்படுகிறதா? நம்மை நாமே சோதித்து அறிவோம். நாம் நம்மை நாமே சோதித்து அறியும் போது நியாயந்தீர்க்கப்படோம்.

53. மணவாட்டிக் கூடாரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை, கல்வாரிக் கூடாரம், கல்வாரி சபை என்றெல்லாம் பெயர் வைத்து என்ன பலன்? நமது சபையில் நம்மிடத்தில் மாம்சத்தின் கிரியைகள் தானே காணப்படுகிறது. நம்மிடத்தில் இன்னும் விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள் இப்படிப்பட்டவைகள் இன்னும் காணப்படுகிறதே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பது இல்லையென்று. கலா.5:20,21 வசனங்களில் வாசிக்கிறோமே.

54. ஏன் சகோ.காலேப் யோசுவா மீது உங்களுக்கு இத்தனை கோபம், வெறி, பகை? அவர் இக்காலத்துக்குரிய செய்தி, கடைசிக்காலச் செய்தி, மணவாட்டி மணவாட்டி என்று கூறிக்கொண்டு

நடக்கும் தவறான போதனைகளை, வஞ்சிப்புகளை வெளிப்படுத்தி, மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதினால் தானே! தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கும் உனக்கு, இக்காலத்துக்குரிய செய்தியை விசுவாசிக்கும் உனக்கு அவன் சொல்லுவது சரிதான் என்று உன் உள்ளத்தில் நீ குத்தப்பட்டும், பின் ஏன் அவனை பகைக்கிறீர்கள்? தீர்க்கதரிசியின் செய்தியிலுள்ள சபை என்று நீ கூறினாலும் உன் நடுவிலுள்ள சபைகள் கள்ள கபடமுள்ள பாஸ்டர்களினால் தானே பெரும்பாலும் வழிநடத்தப்படுகிறது. நீங்களும் அவிசுவாசிகளும் பாவனைவிசுவாசிகளுமாகத்தானே பெரும்பாலும் இருக்கிறீர்கள். இது நீங்கள் உணர்வடைய அழைக்கும் அறைக்கூவலாயிருக்கிறது.

55. நான் இறந்துவிட்டேன் என்ற புரளிக்கு பதில் கிடைத்தது. இந்தப் புரளி சென்னை, போரூர் வாழ் சகோ.தாமஸ் ஜெயசீலன் மூலம் வந்தது என்று நான் சென்னையில் குடியேறியவுடன் கேள்விப்பட்டேன். ஆதலால் அவரைக் காண வாஞ்சித்தேன். இந்நிலையில் செப்டம்பர் மாதம் 28ம் தேதி மாலை சென்னை, மனப்பாக்கம் பாஸ்டர் விஜயகுமார் ஒரு சகோதரனுடன் என்னைக் காண என் இல்லத்திற்கு வந்தார். அவருடன் வந்த நபரை சகோ.தாமஸ் ஜெயசீலன் என அறிமுகப்படுத்தினார். நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைந்தேன். நான் அந்த புரளி விபரம் எதுவும் உடனே அவரிடம் கேட்கவில்லை. எங்களது ஆவிக்குரிய சம்பாஷனைகள் தொடர்ந்துகொண்டிருந்த வேளையில், அந்த புரளிக் குறித்து பேச வாய்ப்புக் கிடைக்க, அந்தச் சகோதரனிடம், சகோதரனே ஏன் என்னைக் குறித்து இந்த புரளியை சென்னையில் பரவச் செய்தீர்கள் என்று கேட்டேன். அவர் கூறியதாவது: சகோதரனே நான் பல ஆண்டுகளுக்கு முன் திருவைகுண்டத்தில் உங்கள் வீட்டிற்கு வந்து அநேக ஆவிக்குரிய காரியங்களைப் பேசி உங்களுடன் கூடயிருந்து சாப்பிட்டு சென்றிருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னை மறந்துவிட்டீர்களே என்றார். மேலும், நான் சில மாதங்களுக்கு முன்பு திருநெல்வேலியில், டவுனில் உள்ள சகோ.மணியின் ஜெபவீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு உங்களைக் குறித்து விசாரித்த போது, அங்குள்ள சகோதரர்கள் உங்களுக்கு மாரடைப்பு வந்து நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், இந்நாட்கள் ஒன்றில் நீங்கள் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். நானும் அதை உண்மையென்று நம்பி இங்கு சென்னை, மதனந்தபுரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் உங்களைக் குறித்து கூறிவிட்டேன் என்று தன் நிலையைக் கூறினார்.

56. பாருங்கள், சகோ.மணியின், 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்ற உபதேசத்தை மிகக் கடுமையாகக் கண்டித்து விமர்சித்திருந்தேன். ஒரு விழிப்புணர்ச்சியை விசுவாசிகள் மத்தியில் கொண்டுவந்தேன். இதனால் அவர்கள் என் மீது ஆத்திரமடைந்து, உயிரோடிருக்கிறவனையும் மரித்துவிட்டான் என்று கூறியுள்ளார்கள். இதென்ன? என் மீது அவர்கள் கொண்டுள்ள வெறியாகும். ஆனால் இவர்கள் யாராம்? கிறிஸ்துவின் மணவாட்டியாம். ஆயிரம் வருட அரசாட்சியில் இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறவர்களாம். உண்மையாகவே இவர்கள் இந்நாட்களில் மனந்திரும்பாவிட்டால் இவர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமுமம் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்று இந்தக் கூட்டத்தாரை எச்சரிப்பது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

57. எனக்கு ஏன் அநேக சபைகளுடன் ஒருமனப்பாடு இல்லை என்பது குறித்து உங்களுக்கு இங்கு எழுதுவது எனக்கு அத்தியாவசியமாகக் காணப்படுகிறது.

1) பொன்னேரி சபை பாஸ்டர் வில்பிரட்டிடம் மூப்பர் பதவியிலிருந்து பாஸ்டர் பதவிக்கு உயர்வு பெற்ற நீர் அரசாங்க உத்தியோகத்திலிருந்து கொண்டு தேவனுடைய சபையை வழிநடத்துகிறது எப்படி, இரண்டு எஜமான்களுக்கு நீங்கள் ஊழியம் செய்யக்கூடாதே, உங்கள் ஊழியத்துக்கு வேதத்தில் ஆதாரமில்லை என்றேன். நீ என் சபைக்கு வராதே என்றார்.
2) அடுத்து கும்மிடிபூண்டி பாஸ்டர் செபஸ்டியானுக்கு ஒன்று நீங்கள் பாஸ்டர் ஊழியம் செய்யுங்கள் அல்லது திருமணத் தரகு பணியில் குமரி முதல் இமயம் வரை சுற்றித் திரிந்து வாருங்கள் என்றேன். நீ ஏன், என் பிழைப்பில் கைவைக்கிறாய் எனக் கூறி எனக்கு விரோதமாக பேசி செயல்படலானார்.
3) பாஸ்டர் ஜான்சாமுவேல் சபைக்கு போகவே மனமில்லை. ஏனென்றால் அங்கு ஸ்தாபனத்தின் ஆவி தான் காணப்படுகிறது.
4) பாஸ்டர் பி.எம்.ஏ.சாமி, சகோ.பிரன்காமின் காலில் தான் யோவான் விழுந்தான் என்ற போதனையை நீ ஏற்றுக்கொள்ள மறுப்பதினால் உனக்கும் எனக்கும் ஆகாது என்று என்னிடம் கூறிவிட்டார். மேலும் நீ W.B.G.N.S.யை எதிர்த்து நிற்கிறாய். எனக்கு அதில் முக்கியப் பங்கு மறைமுகமாக உண்டு. இப்படியிருக்க உன்னை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? செய்தி மொழிபெயர்ப்பையே அடிக்கடி தவறு தவறு என்கிறாய். அதை எப்படி முற்றிலுமாக சரிசெய்ய முடியும்? மொழிப்பெயர்ப்பில் தவறுகள் நடக்கத்தான் செய்யும். அதை நிறுத்த முடியாது என்கிறார். இப்படியிருக்க நான் அவரோடு எப்படி ஐக்கியம் வைத்துக்கொள்ள முடியும்? தவறு திருத்த முடியாது என்பவரிடம் எனக்கு எப்படி ஒருமனம் ஏற்படும்? நாங்கள் எப்படியோ, எதை எதையோ மொழிபெயர்த்துப் போடுவோம், படிக்க இஷ்டமிருந்தால் படியுங்கள், இஷ்டமில்லாவிட்டால் எங்களுக்கு உபத்திரவம் கொடுக்காமல் இருந்தால் போதும் என்பது அவருடைய சித்தாந்தம். இதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?
5) பாஸ்டர் ரவீந்தரராஜ் ஸ்தாபனத்தின் ஆவியினால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு வழிநடத்தப்படுகிறார். இவர் பாஸ்டர் ஜான் சாமுவேலின் பக்கா தோஸ்த். பாருங்கள், இனம் இனத்தைச் சேர்ந்திருப்பதை. தன் ஒரு பிள்ளைக்காவது ஒரு விசுவாசியை திருமணம் செய்து வைக்கவில்லை. ஜெர்மனி சகோ.கர்டு ஒத்தாசையினால் சபையைக் கட்டி, தன் உடைமையாக்கி, இது என் சபை நீ இங்கு வராதே என்றார். உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரை ஒரே பொய், பித்தலாட்டம். ஆனால் நடிப்பு மட்டும் ஐயோ! இந்த பூனையும் பால் குடிக்குமா என்று கேள்வி கேட்கத் தோன்றும். என்னா மாயமான தாழ்மை!
6) பட்டாபிராம் பாஸ்டர் எட்வர்ட் என்று வெளிநாட்டு பணருசி கண்டாரோ அன்றுமுதல் பச்சோந்தி வேஷம் போட ஆரம்பித்துவிட்டார். உனக்கும் பே பே உங்கப்பனுக்கும் பே பே என்ற பல்லவி பாட ஆரம்பித்துவிட்டார். நேரத்திற்கு ஏற்றாற் போல் வேஷம் போட ஆரம்பித்தார். ஆதலால் எனக்கும் அவருக்கும் ஒருமனப்பாடு இல்லாமல் போய்விட்டது.
7) ஆவடி பாஸ்டர் ஆமோஸ் பாஸ்கரனுக்கு பணஆசை. பலஆண்டு என்னோடு குடித்தனம் பண்ணினார். நன்கு பணவசதியுள்ள விபச்சாரி கிடைத்ததால் என்னை விவாகரத்து செய்துவிட்டார். அவள் கற்பு இழந்தால்கூட பரவாயில்லை. ஆனால் அவளிடமுள்ள பணம் எல்லாவற்றிற்கும் உதவும். ஆதலால் அவளை இன்றுமுதல் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்; நீ வீட்டைவிட்டு வெளியேறு என்று என்னைக் கூறிவிட்டார்.

8) புரசவாக்கம் பாஸ்டர் அரவிந்த்கோஸ், பழைய அந்நிய ஆவியினால் பேசும் பழைய அன்னிய பாஷை. எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராத பெண்பிள்ளைகளை ஆதாயப்படுத்தி சபை நடத்துகிறார். பெயரளவுக்குக் கடைசிக்காலச் செய்தி. சத்தியம் என்றால் என்ன என்ற கேள்வி அங்கு. சத்தியத்திற்கு அங்கு இடமேயில்லை.
9) பல்லாவரம் பாஸ்டர் தங்கமணி, என் பிழைப்பில் கைவைக்க வந்த உன்னை எப்படி சபைக்குள் ஏற்றுக்கொள்வேன்? ஐந்துவகை ஊழியத்துக்கு தசமபாகம் பகிர்ந்து கொடுக்கவேண்டுமா? நான் உன்னை ஒரு ஊழியக்காரனாக அங்கீகரிக்கவும் வேண்டாம். தசமபாகத்தை பகிர்ந்து கொடுக்கவும் வேண்டாம். இங்கு வராதே என்று கட்டளையிட்டுவிட்டார்.
10) வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் என்னிடம் நான் திருமணத்தில் ஆண் பெண் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி/மோதிரம் அணியக்கூடாது என்கிறேன், நீ அணிய வேண்டும் என்கிறாய். இப்படியிருக்க நான் உன்னை என் சபையில் எப்படி அனுமதிப்பேன் என்கிறார். ஆனால் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: எனக்கும் உங்களுக்கும், உங்களுக்குப் பின் வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண் பிள்ளைகளும் விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும்; உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்கும் உள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும் என்றார். ஆதி.17:10-11. பாருங்கள், இங்கு உடன்படிக்கைக்கு அடையாளம் ஆண்களில் நுனித்தோல் மாம்ச விருத்தசேதனம். அவ்வண்ணமாகவே திருமணத்தில் ஆண் பெண் செய்த உடன்படிக்கைக்கு அடையாளம் தாலி/மோதிரம் ஆகும். பாஸ்டர் ஜான்சாமுவேலுக்கு ஸ்திரீயின் தலைமுக்காடு புரியாத புதிராக இருக்கிறது. அவ்வண்ணமாகவே பாஸ்டர் சாமுவேலுக்கும் திருமண உடன்படிக்கையின் அடையாளமாகிய தாலி/மோதிரம் புரியாத புதிராகயிருக்கிறது. பொதுவாக இது ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையிலிருந்து இக்காலத்துக்குரியச் செய்திக்குள் வந்தவர்களுக்கு புரியாத புதிராயிருக்கிறது. ஏனென்றால் அந்த ஸ்தாபனஆவி அவர்களை இன்னும் ஆட்கொண்டிருப்பதாலாகும். மேலும் சிலருக்கு பெந்தெகொஸ்தே சபைக்கு வந்தபிறகு தாலியை கழட்டிவிட்டோம், இனி அதை போடுகிறதா என்ற வைராக்கியம்.
இதோடு மட்டுமல்ல நான் பெண்கள் சுடிதார் போடக்கூடாது என்கிறேன். நீயோ போடலாம் என்று உபதேசம் பண்ணுகிறாய்; நான் தசமபாகம் பாஸ்டருக்கு மட்டும் தான் உரியது என்கிறேன். நீயோ ஐந்துவகை ஊழியத்துக்கும் உரியது என்கிறாய். ஆக எனக்கும் உனக்கும் ஒருமனப்பாடு இல்லாததால் என் சபையில் உன்னை அனுமதிக்கமுடியாது எனக் கூறிவிட்டார்.

58. இப்படியாக எல்லாரும் பற்பல காரணத்தின் நிமித்தமாக என்னைத் தடைசெய்கிறார்கள். பாருங்கள், இவர்கள் தாங்கள் மணவாட்டி சபையை வழிநடத்துகிறோம் என்கிறார்கள். இவர்களுக்குள் தான் ஒருமனம், ஒற்றுமையிருக்கிறதா? இவர்கள் அனைவரும் பிரிந்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் எலியும் பூனையுமாயிருக்கிறார்கள். கடைசிக்காலச் செய்தி, மணவாட்டி என்றுக் கூறிக் கூறியே ஒருவரையொருவர் ஏமாற்றி பிழைப்பு நடக்கிறது. எங்கும் உண்மையில்லை. உத்தமஇருதயமில்லை, சுத்தமான கைகளில்லை. தசமபாகம், காணிக்கை வாங்கும் கைகள் கறைப்பட்டதாயிருக்கிறது. எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

59. ஆனால் இவர்கள் பற்பல உபதேசங்களின் மேல் பிரிந்திருக்கவேண்டியது அவசியமே. ஏனென்றால் இக்காலத்துக்குரிய செய்தியின் கீழ் ஒரு ஸ்தாபம் உருவாகப்போவது கிடையாது. இவர்களுக்குள் ஒருமனம் ஏற்படுமாயின் இவர்கள் தங்களை ஒரு ஸ்தாபனமாக்கிவிடுவார்கள். ஆதலால் இவர்கள் பிரிந்திருக்க வேண்டியது தேவனுடைய சித்தமே. If they can come together and bring all their groups together, then an organization will be formed. But in order for the Lord not to have an organization coming out of the message, there are divisions around the world, in the message. பாஸ்டர் ஜான்சாமுவேல், பாஸ்டர் சாமுவேல், பாஸ்டர் ரவீந்தரராஜ், பாஸ்டர் அரவிந்தகோஸ் போன்றவர்கள் ஸ்தாபனத்தைவிட்டு வெளியே வந்தார்களேயன்றி, அந்த ஸ்தாபனத்தின் ஆவியினாலே இன்றும் வழிநடத்தப்படுகிறார்கள். இவர்கள் ஓநாய் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டது போல இக்காலத்துக்குரிய செய்தியை மேல் போர்வையாகப் போர்த்திக் கொண்டிருக்கிறார்கள், அவ்வளவு தான்.

60. நாம் பெந்தெகொஸ்தே காலத்தைக் கடந்துவிட்டோம். இது மகாக்கொடிய வஞ்சிப்பின் காலம். தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படத்தக்கதாக அந்திக்கிறிஸ்துவின் ஆவி கிரியை செய்யும் காலம். நீங்கள் தவறான பக்கம் விழுந்துவிட்டால் உங்கள் பந்தயப்பொருளை இழந்துவிடுவீர்கள். ஆதலால் உங்கள் பாஸ்டரைப் பார்க்காதீர்கள். தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுங்கள். தேவனுக்குச் செவி கொடுங்கள். அங்கு நித்தியஜீவன் உண்டு. நீங்கள் உங்கள் பாஸ்டருடன் தவறான பாதையில் சென்று வருவீர்களானால் அது மரணத்தைக் கொண்டுவரும். ஆதலால் உங்கள் பாஸ்டருடைய ஒவ்வொரு உபதேசத்தையும், நடத்தையையும் கவனித்துக் கொண்டேயிருங்கள். கள்ள கபடமுள்ள வேலையாட்கள் நிறைந்திருப்பதினால் எச்சரிக்கையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள் எனத் திரும்பத் திரும்ப உங்களுக்கு எழுதுவது எனக்கு நலமாய் தோன்றிற்று.

61. Watch how close it gets to that razor edge now, between right and wrong. And remember it'll fall on one or the other sides, till it comes down sometime like a honed razor between the difference of right and wrong. It's got to be every words of God; not just almost every word, but every word! And it is got down to that honed age, in this age where the antichrist anointing is so perfectly, it would decive the very Elected, they'll fall on the wrong side if they don't watch it, like a wedge. (Trying to do God a service 27.11.65 page 29, para 179) பிலேயாம் மோசேயைவிட ஒரு நல்ல ஊழியக்காரனாக அவர்களுக்கு தென்பட்டது. ஆனால் இந்த இரு தீர்க்கதரிசிகளில் பலப்பரிட்சை எழுந்தபோது; ஒருவன் வார்த்தையில் நிலை நின்றிருந்தான். மற்றவன் வார்த்தைக்கு அப்பாற்பட்டவனாயிருந்தான். ஆனால் இருவரும் தீர்க்கதரிசிகளே. ஆனால் ஒருவன் மாத்திரமே வார்த்தையைப் பெற்றிருந்தான். கடைசிநாளில் கள்ள அபிஷேகம் பெற்றவர்கள், பாருங்கள்! இந்நாட்களில் இவர்கள் நம்மத்தியில் நிறைய உண்டு. அன்று வார்த்தையில் உறுதிப்படுத்தப்படாத ஒரு கள்ளப் போதகனை ஏற்றுக்கொண்டார்கள். இன்று மக்கள் அந்த மனநிலையில் தான் இருக்கிறார்கள்.

62. முடிவாக, **அஸ்திபாரம்** - உன் அடக்கம் ஞானஸ்நானத்தில். அது உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கை மீது அமைந்துள்ளது. **ஆலயத்தின் உட்புறம் கேதுரு மரம்.** அது உயிர்த்தெழுந்து, ஆவியினால் நிரப்பப்பட்ட புதிய மனுஷனைக் குறிக்கிறது. 1கொரி.15:13-18. இதர **வாசனை மரங்கள்** அன்பு என்ற மணமாகிய உன் கிரியைகளைக் குறிக்கிறது. நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். எபே.2:10.

63. ஆலயம் சகல சட்டதிட்டத்தின்படி, ஒரு பங்கும் குறைவு இல்லாமல் கட்டிமுடிக்க ஏழு ஆண்டுகள் ஆனது. சாலொமோன் இஸ்ரவேலின் மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப் மாதமாகிய இரண்டாம் மாதம் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்கி, பதினோறாம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதம் கட்டிமுடித்தான். 1ராஜா.6:37,38. தேவன் தம்முடைய சரீரமாகிய சபையை ஏழு சபைக்காலங்கள் வழியாக கட்டிக்கொண்டு வருகிறார். இது ஏழு சபைக்காலங்கள் வழியாக தேவன் தம்முடைய சரீரமாகிய சபைக்கு தம்முடையவர்களை அதாவது தம்முடைய மணவாட்டியை தெரிந்தெடுக்கிறதைக் காட்டுகிறது. நாம் வாழும் இந்தக் காலம் கடைசிசபைக்காலம். இந்தக் காலத்துடன் கட்டிடக்கட்டுமானம் முடியும்.

64. சாலொமோன் கட்டிய ஆலயம் தேவனுக்கு
1) பலியிடும் ஆலயமாக தெரிந்துகொள்ளப்பட்டது. 2நாளா.7:12.
2) தேவன் வாசம் செய்யும் வீடாக மாறிற்று. 2நாளா.6:2.
3) தேவாலயம் மேகத்தினால் நிரப்பப்பட்டது. 2நாளா.5:13.
4) கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. 2ராஜா.5:14.
5) அக்கினி இரங்கிற்று. 2நாளா.7:3.

நீ தேவன் வாசம் செய்யும் ஆலமாக இருக்கிறாயா? 1கொரி.3:16, 1தெச.6:19, 1கொரி.2:12.

65. நீ தேவனுடைய ஆலயமாய் மாறுவாயாகில்:
1) கர்த்தருடைய கண்கள் இரவும் பகலும் உன் மீது திறந்திருக்கும். 2நாளா.6:20.
2) கர்த்தருடைய செவிகள் உன் விண்ணப்பத்திற்கு கவனிக்கிறதாயிருக்கும். 2நாளா6:40.
3) கர்த்தருடைய கண்களும் இருதயமும் எந்நாளும் உன் மீது இருக்கும். உபா.7:16.
4) கர்த்தர் தம் வாக்கினால் உனக்குச் சொன்னதை தம் கரத்தினால் நிறைவேற்றுவார். 2நாளா.6:15.
5) கர்த்தர் தம்முடைய முகத்தைப் புறக்கணியாமல் அவர் வாக்குத்தத்தம் பண்ணின கிருபையை என்றென்றைக்கும் நினைத்தருளுவார். உபா.6:42.
6) நீ நடக்கவேண்டிய நல்வழிகளை அனுதினமும் உனக்குப் போதிப்பார். 2நாளா.6:27.
7) நீ வேண்டிக்கொள்கிறதெதுவோ அதை அவரால் பெற்றுக்கொள்வாய். 1யோ.3:22.

66. சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாகினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம். சரீரத்தில் பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூட பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். 1கொரி.12:12-27.

67. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடும் கூட இருப்பதாக. வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்கள் அனைவருக்கும் என்றென்றைக்கும் இருப்பதாக. ஆமென்.

*நவம்பர், 2003.*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*